மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கோவில்பட்டி

அ.வ.எண். 164/2020

பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமூலம் பி.வா.சா.1.

---

பெயர். – திரு.கருப்பசாமி

த/பெ. – திரு.தர்மகிருஷ்ணதேவர்

கிராமம் – விஜயகரிசல்குளம்

தொழில் – Match Works

தாலுகா – வெம்பக்கோட்டை

வயது – 58

1872–ஆம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டத்தின்படி 2026–ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 12–ஆம் நாள் இந்நீதிமன்ற உதவியாளரால் சத்தியப்பிரமாண வாக்குமூலம் செய்யப்பட்டு, நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டு, ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

<u>முதல் விசாரணை.</u>–

1) நான் இந்த வழக்கில் பிரதிவாதி ஆவேன். எனது தரப்பு சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். அதை பிரதிவாதி தரப்பில் ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

| | |
|---|---|
| 1 | முக்கூட்டுமலை கிராம சர்வே எண்கள்.271/1, 271/2, 271/3 மற்றும் 271/4 க்குரிய UDR 'அ' பதிவேடு வாதி தரப்பில் கிராம நிர்வாக அலுவலர் முத்திரையிட்டு வழங்கப்பட்டுள்ளதால் உரிய அலுவலர் வழங்காத ஆவணம் சாட்சிய சட்டப்படி ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்று ஆட்சேபணைக்குட்பட்டு **பி.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** |
| 2. | முக்கூட்டுமலை கிராம சர்வே எண்கள்.271 க்குரிய புல வரைபடம் வாதி தரப்பில் கிராம நிர்வாக அலுவலர் முத்திரையிட்டு வழங்கப்பட்டுள்ளதால் உரிய அலுவலர் வழங்காத ஆவணம் சாட்சிய சட்டப்படி ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்று ஆட்சேபணைக்குட்பட்டு **பி.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** |
| 3. | 09.02.1998 ம் தேதி ஆவண எண்.69/1998 கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல் **பி.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** |
| 4. | 09.02.1998 ம் தேதி ஆவண எண்.72/1998 கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல் **பி.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** |
| 5. | முக்கூட்டுமலை கிராம சர்வே எண்கள்.271/1, 271/2, 271/3A மற்றும் 271/3B க்குரிய UDR 'அ' பதிவேடு வாதி தரப்பில் கிராம நிர்வாக அலுவலர் முத்திரையிட்டு வழங்கப்பட்டுள்ளதால் உரிய அலுவலர் வழங்காத ஆவணம் சாட்சிய சட்டப்படி ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்று ஆட்சேபணைக்குட்பட்டு **பி.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** |

<u>முதல் விசாரணை தொடர்ச்சி</u> – வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

*திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்ததை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது*

*(ஒப்பம்)C.கருப்பசாமி,*

*மாவட்ட உரிமையியல் நீதிபதி,*
*14.01.2026.*